மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1974-75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

(1) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) போக்குவரத்துத் துறை அமைச்சர், அவைக்கு வராதது குறித்து.

*திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே முக்கியமான ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன். தலைவரவர்கள் தயவுசெய்து நான் பேசுவதைக் கடைசிவரையிலும் கேட்டு விட்டுத் தங்கள் தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே உட்காருங்கள் என்று தயவுசெய்து சொல்லாதீர்கள்.

இப்பொழுது சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பத்திரிகைகளிலும், வெளியிலேயும், ஒரு அமைச்சரைக் காணோம், அவரை யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்களுக்கெல்லாம் மிகவும் கவலையாகவும், எதிர்க்கட்சியிலே சார்ந்திருக்கின்ற எங்களுடைய பொறுப்பை உணர்ந்தும் அவருடைய நிலைமை என்னவாயிற்று என்பதில் அக்கறையோடும் இருக்கிறோம். நேற்றைய தினம் பத்திரிகைக்காரர்களும், எங்களைப் போன்ற நண்பர்களும் அவருக்கு என்ன ஆயிற்று என்ற கவலையில் பலமுறை போன் செய்தும், வீட்டிற்கு ஆள் அனுப்பியும் பார்த்தோம், அமைச்சரைக் காணோம். இந்த மன்றத்தில் முதலமைச்சராக இருப்பவரே போலீஸ் அமைச்சராகவும் இருக்கிறார்கள். அவர்கள் கூட நேரடியாகக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டிய செய்தியைப் பத்திரிகைகளின் மூலமாக அந்த அமைச்சருக்கு வேண்டுகோள் விட்டிருப்பதால் அவர்களுக்கும் இடம் தெரியவில்லையோ என்று நாங்கள் சந்தேகப்பட வேண்டிய நிலையிலிருப்பதால், அவர் என்ன ஆனார், அமைச்சராக இருக்கிறாரா இல்லையா, இராஜினாமா செய்துவிட்டாரா என்ற விவரங்கள் தெரியவில்லை. அவர் எங்கே இருக்கிறார் எந்த இடத்தில் இருக்கின்றார் என்பதை தயவுசெய்து சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு என்ன நிலை ஏற்பட்டது என்பதையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் செழியன் அரவர்கள் ஒரு அமைச்சர் கடத்தப்பட்டுவிட்டார் என்றும், அவர் எங்கே இருக்கிறார் என்றும், அடிக்கடி அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேடியதாகவும் சொன்னார்கள். அவர்களுக்கு ரொம்ப அக்கறை இருக்கிறது என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசும்பொழுது நான் குறுக்கிடவில்லையே.

திரு. முனு ஆதி : நண்பர் என்ற முறையில் அக்கறை இருக்கக் கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் எங்கும் போய்விடவில்லை வில்லை. இன்னும் சிறிது நேரத்தில் அவைக்கு வருவார். காலையிலேகூட என்னை என்னுடைய இல்லத்திலே சந்தித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். ஆகவே, செழியன் அவர்களும், அவருடைய நண்பர்களும் ரொம்பவும் கவலைப்பட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அவரைக் கடத்திச் சென்றுவிட நான் நிச்சயமாக அனுமதிக்க மாட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகரவர்களே, சட்டமன்ற விதி 41-ன் கீழ் தருகின்ற "கால் அட்டென்ஷன்" இன்ன காரணத்தால் ஒப்புக்கொள்ளப்பட வில்லை என்று சொல்லாமல், எந்தக் காரணமும் இல்லாமல் தள்ளப்பட்டிருக்கிறது. மேட்டூர் "பியர்ட்செல்" சம்பந்தமாக வும், அதே நேரத்தில் குமாரபாளையம் சம்பந்தமாகவும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பல முறை சொல்லியிருக் கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் மறுக்கப்பட்டாலும், கால் அட்டெண் ஷன் அறிவிப்புகள் மறுக்கப்பட்டாலும், கேள்விகள் மறுக்கப்பட்டாலும் அதை இந்த அவையில் கேட்கக்கூடாது. என் அறையிலேதான் கேட்க வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறேன். எனவே, அதை இங்கே கேட்கக்கூடாது, அங்கேதான் கேட்க வேண்டும்.

(3) 1974–75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : பேரவைத் தலைவரவர்களே, அவை முன் இருக்கும் 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் 3 கோணங்களில் பரிசீலிப்ப பதாக இருக்கிறேன். முதலிலே, நம்முடைய அரசுக்குத் தேவையான உதவியை மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற முடியுமோ அந்த அளவிற்கு நாம் பெறுவதற்கு முயற்சி எடுத் திருக்கிறோமா இல்லையா என்பது . இரண்டாவது, நம் முன்னுள்ள சோஷலிசத் திட்டங்களை அமல்படுத்துவதிலே முயன்றிருக்கிறோமா என்பதைப்பற்றியது. மூன்றாவது, நம்முடைய நிதிக் கொள்கையின் காரணமாக, வரிவிதிப்புக் கொள்கையின் காரணமாக. வரிச் சுமைகளின் காரணமாக ஏழை மக்களுக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்பதைப் பற்றியது.

இந்த மூன்று கோணங்களிலிருந்தும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் பார்க்கும்பொழுது நிச்சயமாகச் சொல்வேன், இந்த பட்ஜெட் வரவேற்கின்ற முறையிலேதான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த அரசின்